Saranam Vilithaal

Ayyappa · Tamil

சரணம் விளித்தால் மரணம் இல்லை
சாஸ்தா நாமம் அருளின் எல்லை

தருணம் இதுதான் சரணம் போடு
தர்ம சாஸ்தா பாதம்பாடு
சரணம் விளித்தால் மரணம் இல்லை
சாஸ்தா நாமம் அருளின் எல்லை

காக்கும் தெய்வம் திருமால் நாமம்
கருணை செய்யும் ஈஸ்வர நாமம்
கலந்து மகிழ்ந்த ஐயன் நாமம்
கூவி வந்தால் புவியில் ஷேமம்

சரணம் விளித்தால் மரணம் இல்லை
சாஸ்தா நாமம் அருளின் எல்லை

காடும் மேடும் வீடும் வாசல்
கல்லும் முள்ளெளம் மல்லிகை மெத்தை
ஆடும் மனத்தை அடக்கி வா வா
ஐயன் மேடை நாடி வா வா
சரணம் விளித்தால் மரணம் இல்லை
சாஸ்தா நாமம் அருளின் எல்லை

நெய்போல் உருகும் மனதில் ஐயன்
நேரில் வருவான் நிறையத் தருவான்
குருவை நாடு மாலையை சூடு
கோடி ஞான ஜோதியை பாடு

சரணம் சரணமே சரணம் பொன் ஐயப்பா
ஐயப்போ சரணம் சரணம் பொன் ஐயப்போ....